# ஏப்ரல் - 21 - வெள்ளி

**புனித அன்சலம்**

**ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்: என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.**
**திபா. 118:1**

## முதல் வாசகம்: திருத்தூதர் பணி 4 : 1- 12

அக்காலத்தில் பேதுருவும் யோவானும் மக்களோடு பேசிக் கொண்டிருந்தனர். அப்போது குருக்களும், சதுசேயர்களும், கோவில் காவல் தலைவரும் அங்கு வந்தார்கள். அவர்கள் மக்களுக்குக் கற்பிப்பதையும் இறந்தோர் இயேசுவின் மூலம் உயிர்த்தெழுவர் என்று அறிவித்ததையும் கண்டு எரிச்சலடைந்து, அவர்களைக் கைதுசெய்தார்கள் ஏற்கனவே மாலையாகிவிட்டதால் மறுநாள்வரை காவலில் வைத்தார்கள். அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்ட பலரும் நம்பிக்கை கொண்டனர். இவ்வாறு நம்பிக்கை கொண்ட ஆண்களது எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம். மறுநாள் தலைவர்களும், மூப்பர்களும், மறைநூல் அறிஞர்களும் எருசலேமில் ஒன்று கூடினார்கள். அவர்களுடன் தலைமைக் குருவான அன்னாவும், கயபா, யோவான், அலக்சாந்தர் ஆகியோரும், தலைமைக் குருவின் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் கூடியிருந்தார்கள். அவர்கள் திருத்தூதர்களை நடுவில் நிறுத்தி, "நீங்கள் எந்த வல்லமையால், அல்லது எந்தப் பெயரால் இதனைச் செய்தீர்கள்?" என்று வினவினார்கள். அப்பொழுது பேதுரு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அவர்களுக்கு மறுமொழியாகக் கூறியது: "மக்கள் தலைவர்களே, மூப்பர்களே, உடல் நலமற்றியிருந்த இவருக்கு நாங்கள் செய்த நற்செயல் எப்படி நிகழ்ந்தது என்பதைக் குறித்து நாங்கள் இன்று விசாரணை செய்யப்படுகிறோம். நாசரேத்து இயேசுவின் பெயரால் இவர் நலமடைந்து நம்முடன் நிற்கிறார். இது உங்கள் எல்லாருக்கும், இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கட்டும். நீங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிருடன் எழுப்பினார். இந்த இயேசுவே, "கட்டுகிறவர்களாகிய உங்களால் இகழ்ந்து தள்ளப்பட்ட கல். ஆனாலும் முதன்மையான மூலைக் கல்லாக விளங்குகிறார்". இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின்கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை" என்றார்.

**பதில்பாடல் :** கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்தின் மூலைக்கல் ஆயிற்று

## நற்செய்தி : யோவான் 21 : 1 – 14

அக்காலத்தில் இயேசு தம் சீடருக்குத் திபேரியக் கடல் அருகே மீண்டும் தோன்றினார். அவர் தோன்றியது இவ்வாறு : சீமோன் பேதுரு, திதிம் எனப்படும் தோமா, கலிலேயாவிலுள்ள கானாவைச் சேர்ந்த நத்தனியேல், செபதேயுவின் மக்கள் ஆகியோரோடு இயேசுவின் சீடர்களுள் வேறு இருவரும் கூடியிருந்தனர், அப்போது சீமோன் பேதுரு அவர்களிடம், "நான் மீன்பிடிக்கப் போகிறேன்" என்றார். அவர்கள், "நாங்களும் உம்மோடு வருகிறோம்" என்று போய்ப் படகில் ஏறினார்கள். அன்று இரவு அவர்களுக்கு மீன் ஒன்றும் கிடைக்கவில்லை. ஏற்கெனவே விடியற்காலை ஆகியிருந்தது. இயேசு கரையில் நின்றார். ஆனால் அவர் இயேசு என்று சீடர்கள் அறிந்து கொள்ளவில்லை. இயேசு அவர்களிடம், "பிள்ளைகளே! மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "இல்லை" என்றார்கள். அவர், "படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள் மீன் கிடைக்கும்" என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே வீசினார்கள். மீன்கள் மிகுதியாய் அகப்பபட்டதால் அவர்களால் வலையை இழுக்க முடியவில்லை. இயேசுவின் அன்புச் சீடர் அதைக் கண்டு பேதுருவிடம், "அங்கு நிற்பவர் ஆண்டவர்தாம்" என்றார். அதைக் கேட்டவுடன் தம் ஆடையைக் களைந்திருந்த சீமோன் பேதுரு ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார். மற்றச் சீடர்கள் மீன்களுடன் வலையை இழுத்துக்கொண்டு படகிலேயே வந்தார்கள். அவர்கள் கரையிலிருந்து வெகு தொலையில் இல்லை் ஏறக்குறைய நூறு மீட்டர் தொலையில்தான் இருந்தார்கள். படகைவிட்டு இறங்கியவுடன் கரியினால் தீ மூட்டியிருப்பதையும் அதன்மீது மீன் வைத்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். அங்கு அப்பமும் இருந்தது. இயேசு அவர்களிடம், "நீங்கள் இப்போது பிடித்தவற்றில் சில மீன்களைக் கொண்டு வாருங்கள்" என்றார். சீமோன் பேதுரு படகில் ஏறி, வலையைக் கரைக்கு இழுத்தார். வலை நிறைய பெரிய மீன்கள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை நூற்று ஐம்பத்து மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. இயேசு அவர்களிடம், "உணவருந்த வாருங்கள்" என்றார். சீடர்களுள் எவரும், "நீர் யார்?" என்று இயேசுவிடம் கேட்கத் துணியவில்லை. ஏனெனில், அவர் ஆண்டவர் தாம் என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள். இயேசு அவர்கள் அருகில் வந்து, அப்பத்தை எடுத்து அவர்களிடம் கொடுத்தார் மீனையும் அவ்வாறே கொடுத்தார். இவ்வாறு, இயேசு இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு தம்சீடருக்கு இப்போது மூன்றாம் முறையாகத் தோன்றினார்

**தியானம்:** இன்றைய திரு வாசகங்கள் கிறிஸ்தவர்களாகிய எமக்கு இறை விசுவாசம் ஆணிவேரும் அடித்தளமுமாக இருக்கிறது என்பதனை சுட்டிக்காட்டி நிற்கின்றன. உயிர்த்தெழுதலின் பின் மூன்றாம் முறையாக சீடர்களுக்கு காட்சி அளிக்கின்றார் . சீடர்கள் அப்பம் பிட்கையில் யேசுவை அடையாளம் கண்டு கொள்கின்றனர். அவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டவர்களாக வலையை வீசி, மிகுதியான மீன்களைப் பிடிக்கின்றனர் . தாம் அன்பு செய்தவர்களிடம் மீண்டும் வந்து, பந்தி அமர்ந்து அவர்களின் அகக் கண்களைத் திறக்கின்றார். விசுவாச வாழ்வில் ஆழப்படுத்துகின்றார். உயிர்த்த யேசுவின் வல்லமையோடு, ஆவியின் துணை கொண்டு, சீடர்கள் புதுமைகளை ஆற்றினார்கள். அதனால் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டார்கள். சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஆனால் எதற்கும் அவர்கள் அஞ்ச வில்லை. பின்வாங்கவில்லை. தம்வாழ்க்கை முழுவதும் உயிர்த்த யேசுவுக்கே சான்று பகர்ந்து கொண்டே இருந்தார்கள். யேசு பல தடவைகளில் எமக்கு தம்மை காட்டுகின்றார். எம்மைத்தேடி வருகின்றார். அவரின் வருகைக்கு தொடுகைக்கு விழிப்பாக உணர்வுள்ளவர்களாக இருக்கின்றோமா? கறிஸ்தவன், கிறிஸ்தவள் என்று சொல்வதில் பெருமைப் படுகின்றோமா? அல்லது அப்படி சொல்வதில் வெட்கப்படுகின்றோமா? எம்மையே நாம் கேள்வி கேட்டுக்கொள்வோம்.?